*You were such a lovely, friendly, kind boy always taking to the time to have a chat with everyone and ask how they were and what they were up to. I will really miss seeing your smiling face in the george. It was a pleasure to have known you. I hope you are at peace now, love the nicer, classier harris sister! (your words not mine!) xxx*

*Lily Harris (London)*

Dearest Ahilan
You were our son,
-loving and much loved
Now, you are one with God
-you have become our God
May God Bless

Mum & Dad



# Ahilan Gopalakrishnan

**13 Jan 1988 - 04 Aug 2008**

*You'll forever be in our hearts, Ahilan. I will never forget the memories I have of you... from dad's party, to the rainforest night out, to my 21st this year. You always came to our things, and with a smile on your face. You were an amazing person, and I'll cherish the jokes we had. You will truly be missed xxx.*

Sarah Logeswaran (Cardiff)





Always genuine, always smiling and always raving. you were a top boy Gops. You will be missed by so many.

Conor John Pearson (Kent Uni.)

Ahilan (Starry, Starry Night)

Starry, starry night
Paint your palette blue and gray
Look out on a summer's day
With eyes that know the darkness in my soul
Shadows on the hills
Sketch the trees and the daffodils
Catch the breeze and the winter chills
In colors on the snowy linen land

Chorus:
Now I understand
What you tried to say to me
How you suffered for your sanity
How you tried to set them free

Complimentary
"Vincent (Starry, Starry Night)"

They would not listen they did not how
Perhaps they'll listen now

Starry, starry night
Flaming flowers that brightly blaze
Swirling clouds in violet haze
Reflect

Kevin Leno (London)

I was Captain at sarvic for my season there and everytime i have seen u since, and there have been a few over the years, u had never forgotten to mention to me that u should have been captain. u were the true captain of sarvic.... u will be forever remembered and missed. each night i will look out for u so u shine like the big star that you are. R.I.P

James Bryant



I miss you so much Ahilan.
Another turning point
A fork stuck in the road
Time grabs you by the wrist
directs you where to go.
So make the best of this test
and don't ask why.
It's not a question
But a lesson learned in time.

It's something unpredictable
but in the end it's right.
I hope you had the time of
your life.

So take the photographs
and still frames in your mind.
Hang them on a shelf
In good health and good times
Tattoos and memories
and dead skin on trial.
For what it's worth,
it was worth all the while.

It's something unpredictable
but in the end it's right.
I hope you had the time of
your life.

(music breaks)

It's something unpredictable
but in the end it's right.
I hope you had the time of
your life.

It's something unpredictable
but in the end it's right.
I hope you had the time of
your life.

Kevin Leno (London)

# எழும்பி வாங்கோ என்ர செல்வங்களே!!!



லண்டன் தமிழர்களை உலுக்கிய மழலைகளின் அந்த கொடிய சம்பவத்தின் இறுதி நிகழ்வுகள் குரொய்டனில் ஓகஸ்ட் 21 அன்று நடைபெற்றது. சஞ்சயன் நவநீதன் (5), சாரனி நவநீதன் (4) இரு சிறார்களதும் உடல்கள் ஒரே இடத்தில் அருகருகே மண்ணுள் வைக்கப்பட்ட காட்சி அவர்களை இறுதியாக வழியனுப்ப வந்திருந்த 200க்கும் மேற்பட்டவர்களது கண்களை கலங்க வைத்தது.



எழும்பி வாங்கோ என்ர செல்வங்களே என்று தாய்மாமன் கதறியழ அவர்களைத் தாங்கிய பேளைகள் தந்தையும் உற்றாரும் புடை சூழ ஊர்வலமாக அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சஞ்சயனனைத் தாங்கிய பேழை அவனுக்கு விருப்பமான ரேசிங்கார் படங்களால் அலங்கரிக்கப்பட்டும் சாரணியைத் தாங்கிய பேழை அவளுக்கு விருப்பமான சின்னத் தேவதைகளால் அலங்கரிக்கப்பட்டும் இருந்தது. அவர்ளுடன் அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுப் பொருட்களும் அவர்களுடன் சேர்த்து ......

இச்சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்ட குழந்தைகளின் தாயார் சசிகலா நவநீதன் (35) கைது செய்யப்பட்டு Mental Health Act, பிரிவு 2 சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு உள்ளார். சசிகலா மீண்டும் கர்ப்பமாகி உள்ளதும் மருத்துவ பரிசோதனைகளில் தெரியவந்து உள்ளது.

தந்தை நடராஜா நவநீதன் (39) கைது செய்யப்பட்டு யூன் 1ம் திகதி குற்றப் பதிவுகள் எதுவும் பதிவு செய்யப்படாமல் விடுவிக்கப்பட்டார்.

தற்போது அமைதியான கிராமப் புறமான அவர்கள் வாழ்ந்த வீட்டில் மரண விசாரணைக் குழுவினரும் சிறுவர் துஸ்பிரயோக விசாரணைக் குழுவினரும் விசாரணைகளில் ஈடுபட்டு உள்ளனர்.



இச்சம்பவத்தில் காயத்திற்கு உள்ளான ஆறுமாதங்களேயான பெண் குழந்தையின் உடல்நிலை ஆபத்தான நிலையைத் தாண்டி தேறிவருகின்றது.

## சம்பவம்

மே 30ம் திகதி தெற்கு லண்டனில் கார்ஸ்ஹோல்ரன் பகுதியில் இருந்து பொலிசாரின் 999ற்கு இரவு 10:30க்கு அழைப்பு வந்துள்ளது. பொலிசாருக்கு ஒரு மொழி பெயர்ப்பாளரும் அவசியமாக இருந்து உள்ளது. 10:50 அளவில் பொலிஸ் வாகனங்களும் மருத்துவ வண்டிகளும் சம்பவ இடத்திற்கு விரைந்தன. 4 அல்லது 5 மருத்துவ வண்டிகளும் 10க்கு மேற்பட்ட பொலிஸ் கார்களும் அவ்விடத்திற்கு விரைந்துள்ளது. பொலிசார் சம்பவம் இடம்பெற்ற பார்க் லேனில் உள்ள வீட்டுக்குள் சென்று சில நிமிடங்களிலேயே ஒரு பிஞ்சுக் குழந்தையை போர்த்தியவாறு தூக்கி வந்தனர். அதன் உடல் இரத்தத்தில் தோய்ந்து இருந்தது. அப்பிஞ்சுக் குழந்தையை காக்க பராமெடிக் முயற்சித்தவாறே அவர்கள் உடனடியாக மருத்துவமனை நோக்கி விரைந்தனர்.

குழந்தையைத் தொடர்ந்து சாரனி மருத்துவ வண்டிக்கு கொண்டு வரப்பட்டார். அவரைத் தொடர்ந்து சஞ்சயன் மருத்துவ வண்டிக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர்களுக்கு ஒக்ஸிஜன் வழங்கப்பட்டு முதலுதவி வழங்கப்பட்டபடியே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களது உடலும் இரத்தத்தில் தோய்ந்து இருந்தது. சசிகலா மௌனமாக இவற்றை பார்த்தபடி நின்றார்.

மூன்று சிறார்களுமே கார்ஸ்ஹோல்ரன் பகுதியில் உள்ள சென் ஹேய்லியர் மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குழந்தைகளை மருத்தவமனைக்கு அனுப்பியதன் பின் அரைமணி நேரம் கழித்து சசிகலாவுக்கு பொலிசார் கை விலங்குமாட்டி அழைத்து வந்தனர்.



உடுத்திருந்த உடுப்பில் இரத்தம் பட்டு இருந்தது. அவரைத் தொடர்ந்து நவநீதன் வீட்டில் இருந்து அழைத்த வரப்பட்டார். அவர் பொலிஸ் வாகனத்தின் இருக்கையில் அமர்த்தப்பட்டார். அதன் பின் கைத்தொலைபேசியில் சில நிமிடங்கள் உரையாற்றிய அவர், பின் பொலிசாருடன் வாக்குவாதப்படவே அவரை பொலிஸ் வாகனத்தில் இருந்த கூண்டுக்குள் அடைத்தனர்.

அதற்கிடையே சம்பவத்தை கேள்விப்பட்டு சில நண்பர்களும் உறவினர்களும் நவநீதனுடைய வீட்டுக்கு விரைந்தனர். அவர்கள் பிள்ளைகள் உயிரிழந்து விட்டனர் என கண்ணீர்விட்டுள்ளனர்.

மருத்துவ மனைக்கு கொண்டு செல்லப்பட்ட சிறுவர்களைக் காக்க மருத்துவர்கள் எவ்வளவோ போராடிய போதும் சாரணி இரவு 11:41க்கு மரணமானார். அடுத்த 15 நிமிடத்திர் சகோதரன் சஞ்சயனும் மரணமானார்.

ஆறுமாதக் குழந்தையை மட்டுமே மருத்துவர்களால் காப்பாற்ற முடிந்தது. குழந்தை மத்திய லண்டனில் உள்ள சென் தோமஸ் மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

## பின்னணி

இச்சம்பவம் பற்றி இக்குடும்பத்தினரது உறவினர் ஒருவர் உதயனுக்குத் தெரிவிக்கையில் தாயே குழந்தைகளை குத்திவிட்டு பொலிசாருக்கு தகவல் கொடுத்ததாகத் தெரிவித்தார். அண்மைக் காலத்தில் அவர் மனநிலை பாதிக்கப்பட்டு இருந்திருக்கலாம் என்றே தாங்கள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் சுண்ணாகம் பகுதியைச் சேர்ந்த இவர்கள் எட்டு வருடங்களக்கு முன் லண்டனுக்கு புலம்பெயர்ந்து உள்ளனர். ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியிலேயே கார்ஸ்ஹோல்ரன் பகுதியில் உள்ள பார்க் லேன் வீட்டுக்கு குடியேறி உள்ளனர்.

மரணமான சிறார்கள் இருவரும் அருகில் உள்ள All Saints Church of England Primary Schoolல் கல்வி கற்றனர்.

இவர்கள் Best Save Food & Wine சிறிய கடையொன்றை நடத்தி வந்தனர் நவநீதன் பெரும்பாலும் கடையிலேயே நீண்ட நேரம் வேலை செய்து வந்தார். சசிகலாவும் கைக்குழந்தையுடன் பிள்ளைகளையும் பராமரித்து கடை வியாபாரத்தையும் கவனித்து வந்தார்.

குழந்தைப் பேற்றுக்கு பின்னான மன உளைச்சலால் இவர் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என உறவினர்கள் கூறுகின்றனர்.

இவ்வறான சம்பவம் தமிழ் சமூகத்தில் நடந்திருப்பது இதுவே முதற்தடவையாக உள்ளது. குழதைகளை கொலை செய்த தாயார் தான் தற்கொலை செய்ய முயற்சித்த போது கைது செய்யப்பட்ட சம்பவம் ஒன்று சில ஆண்டுகளுக்கு முன் ரொறன்ரோவில் இடம்பெற்றது. இது உதயன் பத்திரிகையிலும் வெளியாகி இருந்தது. தமிழ் சமூகம் வேறுசில சமூகப் பிரச்சினைகளையும் எதிர்கொள்வதையே இவை காட்டுகின்றன.




தமிழ் சமூகத்திடையே காணப்படுகின்ற இவ்வாறான மௌன அழுகைக்குப் பின்னாலுள்ள சமூகக் காரணிகளைக் கண்டறிந்து கொள்வதும் அதனை தீர்ப்பதற்கான காரணிகளைக் காண்பதும் தமிழ் சமூகத்தின் முன்னுள்ள முக்கிய காரணிகளாக உள்ளது.

# நியூஹாம் இளைஞர்கள் எழுவருக்கு 63 ஆண்டுகள் சிறைத் தண்டனை



ஆயுட் தண்டனை பெற்ற சென்தூர்ராஜ் தவபாலசிங்கம் (சைக்கோ) & கிருபானந்தராஜா குணரட்ணம் (கிருபா)

கொலை முயற்சி மற்றும் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 20 வயதிற்கும் 32 வயதிற்கும் இடைப்பட்ட 7 தமிழ் இளைஞர்களுக்கு ஓல்ட் பெயிலி (முடன மயடைநல) 63 ஆண்டுகள் நீண்ட சிறைத்தண்டனையை நேற்று (யூலை 18)ல் வழங்கி உள்ளது. "மோசமான காயங்களை ஏற்படுத்துவதற்காக அபாயகரமான ஆயுதங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட தாக்குதல் இது. லண்டன் தெருக்களில் கோஸ்டி மோதல்கள் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது" என்று குற்றவாளிகளுக்கான தண்டனையை வழங்கி தீர்ப்பளித்த நீதிபதி ரிச்சட் ஹக்கின் கியூசி தனது தீர்ப்பில் குறிப்பிட்டு உள்ளார். யூன் 19ம் திகதி குற்றவாளிகளாக காணப்பட்ட இவர்களுக்கு நேற்று தண்டனைக் காலம் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை நியூஹாம் துணை மேயர் போல் சத்தியநேசன் வரவேற்பதாகத் உதயனுக்குத் தெரிவித்தார்.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 2006 யூன் 28ல் அல்பேட்டனில் வைத்து எதிர் கோஸ்டியைச் சேர்ந்த அருள்முருகன் செபமாலை (வயது 23) என்பவரை கொலை செய்ய முயற்சித்ததற்காக, கிழக்கு லண்டன் ஈஸ்ற்ஹாம் பகுதி வன்முறைக் குழுவைச் சேர்ந்த 7 தமிழ் இளைஞர்களுக்கு மொத்தமாக 63 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

## குற்றவாளிகள்:

கிருபானந்தராஜா குணரட்ணம் (கிருபா) (வயது 32) - வேலையற்றவர், சென்தூர்ராஜ் தவபாலசிங்கம் (சைக்கோ) (வயது 21) - காசாளர், சபேசன் சிவநேஸ்வரன் (வயது 20) - தொழிற்சாலைத் தொழிலாளி, ஆறுமுகன் பார்தீபன் (வயது 24) - மாணவர், எட்வேட் ஜெகநாதன் (வயது 26) -விற்பனையாளர், செல்வராஜா மயூரன் (வயது 28) - விற்பனையாளர், சந்தோஸ் சசிகரன் (வயது 26) - வேலையற்றவர் ஆகியோரே குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை பெற்று உள்ளனர்.

## தண்டனைக் காலம்:

அருள்முருகன் செபமாலை என்பவரை கொலை செய்ய முயற்சித்த குற்றத்திற்காகக் கிருபானந்தராஜா குணரட்ணம் (கிருபா), சென்தூர்ராஜ் தவபாலசிங்கம் (சைக்கோ), சபேசன் சிவநேஸ்வரன் (20), ஆறுமுகன் பார்தீபன், (24) ஆகியோருக்கு நீண்ட தண்டனைகளை வழங்கி உள்ளது. இவர்களுக்கு கொலை முயற்சிக்காக ஆயுட் சிறைத் தண்டனை வழங்கிய நீதிபதி, கிருபானந்தராஜா குணரட்ணம், சென்தூர்ராஜா தவபாலசிங்கம் ஆகிய ஒவ்வவொருவரும் குறைந்தது 12 வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தெரிவித்து உள்ளார். ஆறுமுகம் பார்தீபன் குறைந்தது 9 வருடங்களும், சபேசன் சிவநேஸ்வரன் குறைந்தது 8 வருடங்களும் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி பணித்து உள்ளார்.



ஆயுட் தண்டனை பெற்ற சபேசன் சிவநேஸ்வரன் & ஆறுமுகன் பார்தீபன்

எட்வேட் ஜெகநாதன், செல்வராஜா மயூரன் ஆகிய இருவரும் கொலை முயற்சிக்காக அல்லாமல் உடலில் பாரிய காயங்களை ஏற்படுத்தியதாக நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. அதனால் இவர்களுக்கு முறையே 9 வருடமும், 10 வருடமும் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. மற்றையவரான சந்தோஸ் சசிகரன் வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் உடலில் காயங்களை விளைவித்ததாகவும் நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது. அதனால் அவருக்கு 3 ஆண்டுகள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

பிரித்தானியாவில் 2000 ஆண்டிற்கு பிற்பாடு தமிழ் இளைஞர் வன்முறைக் குழுக்களிடையேயான மோதல்கள் மிகத் தீவிரம் அடைந்தது. 2000ம் ஆண்டு முதல் இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று உள்ளது. இதில் 20ற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் ஒரு குறித்த சம்பவம் தொடர்பாக இத்தனை பேர் கைது செய்யப்பட்டு இவ்வளவு நீண்ட தண்டனை பெற்றது இதுவே முதற்தடவையாகும்.

## பின்னணி:

2006 யூன் 28ல் அல்பேட்டனில் உள்ள மசயநஅயச யுளந ல் செபமாலை என்பவர் தாக்கப்பட்டார். அவரும் அவருடைய நண்பர்களுமாக ஐவர் கிரிக்கெட் விளையாட காரில் பயணமாகிக் கொண்டு இருந்தனர். அப்போது 25 பேரைக் கொண்ட கிழக்கு லண்டன் இளைஞ்ஞர் கோஸ்டி இவர்களை வழமறித்து தாக்கியது. தாக்கியவர்கள் வாள், கோடரி, சுத்தியல், இரும்புக் கம்பி போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை நடத்தினர். இவர்களில் ஒருவர் போத்தலை செபமாலை மீது செருக் செபமாலை நிலத்தில் வீழ்ந்தாகவும் அப்போது கிருபா தனது வாளால் செபமலையில் தலையைத் துண்டிக்க வாளை ஓங்கியதாகக் கூறிய பொலிஸார் அதனை தனது கிரிக்கட்-பட்டைக் கொண்டு செபமாலை தடுக்கவே தலைக்கு வந்தது கையைச் சீவியதாகத் தெரிவித்தானர்.

வன்முறைக் கோஸ்டியினர், "அவனைக் கொல்லு சைக்கோ அவனைக் கொல்லு" என்று ஆர்ப்பரித்ததாகவும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது. சைக்கோ தனது 3 அடி நீளமான வாளை உயர்த்தியபடி தங்களை ஓடி வந்ததாக அருள்முருகன் செபமாலை நீதிமன்றத்தில் தனது சாட்சியத்தில் தெரிவித்து இருக்கிறார்.

## கைது:

அன்று நொற்றிங்கம் காணிவேலில் இருந்து திரும்பிய பொலிஸாரைக் கண்டதும் வன்முறைக் கோஸ்டி கலைந்து ஓடியது. ஆயினும் சைக்கோவை பொலிஸார் அந்த இடத்திலேயே வளைத்துப் பிடித்தனர். சிவனேஸ்வரன் அருகில் உள்ள வீதியில் வைத்து மடக்கிப் பிடிக்கப்பட்டார். கிருபா தப்பிச் செல்கையில் அப்பகுதியில் வசிப்பவர் ஒருவர் அவரை மடக்கிப் பிடித்து அப்பகுதியால் சென்று கொண்டிருந்த பொலிசாரிடம் ஒப்படைத்தார். பார்தீபனும் ஜெகநாதனும் அவர்களுடைய ஐக்கற் இல்லாமல் பொலிசாரால் சுற்றுத் தள்ளி வளைத்துப் பிடிக்கப்பட்டனர். அப்பகுதி வாசி வழங்கிய துப்பின் அடிப்படையில் இவர்களுடைய ஐக்கற்றும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது. மற்றைய இருவரான மயூரன், ஜெகநாதன் பின்னர் கைது செய்யப்பட்டனர்.

## தமிழ் வர்த்தக சமூகம் - பொலிஸ்:



நீண்டகாலத் தண்டனை பெற்ற எட்வேட் ஜெகநாதன் & செல்வராஜா மயூரன்

ஈஸ்ற்ஹாம் பகுதி தமிழர்களும் அப்பகுதி Safer Neighbourhoods குழுவினரும் இணைந்து செயற்பட்டதால் இக்குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுக் கொடுக்க முடிந்ததாக நியூஹாம் பொலிசார் தெரிவித்து உள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டு தண்டனை பெற்றுக் கொடுக்கப்பட்டதால் நியூஹாமின் ஒரு பகுதியில் வன்முறை இழப்புகள் 80 வீதமாகக் குறைந்து உள்ளதாகவும் சமூகப் பிறள்வான நடவடிக்கைகள் 50 வீதமாகக் குறைந்து உள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஏற்கனவே ஈஸ்ற்ஹாம் தமிழ் வர்த்தகர்கள் பொலிஸாரைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இப்போது இவர்களை சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தி சிறையில் போட்டதற்கு ஈஸ்ற்காம் தமிழ் வர்த்தகர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்து உள்ளனர்.

16 வாரங்கள் இடம்பெற்ற இந்த நீண்ட வழக்கில், அரச தரப்பில் 103 பேர் சாட்சியமளித்தனர். 300 விடயங்களும் 60 குற்றவியல் ஆய்வுகளும் சமர்ப்பிக்கப்பட்டது. 52 அடையாள அணிவகுப்புகள் இடம்பெற்றது. அரசதரப்பால் 2800 பக்க ஆதார ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டது.

## விசாரணை அதிகாரி:

இச்சம்பவம் பற்றிய விசாரணையை மேற்கொண்ட அதிகாரி டீஐ அன்டி சார்ள்மர்ஸ், "இந்த வன்முறைக் கோஸ்டிகள் தாங்கள் சட்டத்திற்கு மேலானவர்கள் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவர்களது திட்டமிட்ட கொடுமையான தாக்குதலுக்கு அவர்கள் குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்பட்டதும் அவர்களுக்கு வழங்கப்பட்ட நீண்ட தண்டனையும் அவர்கள் சட்டத்திற்கு மேலானவர்கள் இல்லை என்பதை காட்டி இருக்கிறது" என்று தெரிவித்தார்.



சுப்பிரின்டன்ட் டெரிக் கிறிபித்

முன்னர் நியூஹாம் சமூக பொலிஸ் பிரிவின் தலைமை அதிகாரியாக இருந்த சுப்பிரின்டன்ட் டெரிக் கிறிபித், இவ் வழக்குப் பற்றித் தெரிவிக்கையில், "ஈஸ்ற்ஹாம் குற்றங்களுக்கும் ஒழுங்கீனங்களுக்குமான ஒரு முக்கிய புள்ளியாக இனிமேல் இருக்காது" என்றும் "தண்டனை பெற்றவர்களுடைய நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு இருக்காவிட்டால் இந்நிலை ஏற்பட்டு இருக்காது" என்றும் தெரிவித்தார்.

## துணை மேயர் போல் சத்தியநேசன்:

இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை வரவேற்ற நியூஹாம் துணை மேயர் போல் சத்தியநேசன், "பிரித்தானியா வன்முறைக் குழுக்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் புகலிடமல்ல. இவர்கள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது சமுதாயத்தின் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியம். நாம் இலங்கையில் இருந்து உயிர் பாதுகாப்புக்காக தஞ்சம் பெற்ற நாங்கள். ஆனால் இங்கும் வன்முறைகளுக்கும் கோஸ்டி மோதல்களுக்கும் பயந்து வாழ முடியாது. இந்த வகையான வர்களைக் கட்டுப்படுத்த பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்குவது அவசியம்" என தேசம்நெற் இணையத்திற்குத் தெரிவித்தார்.

"இவ்விளைஞர்களின் இந்தக் கொடூரமான செயலால் பலர் பாதிக்கப்படுகின்றனர்" என்று குறிப்பிட்ட துணை மேயர் போல் மேலும் தெரிவிக்கையில், "இவர்களின் செய் கையினால் இன்று அவர்களே தங்கள் வாழ்க்கையையும் துலைத்து நிற்கின்றனர்" என்று தெரிவித்தார். "சமுதாயமாக இவ்வாறான விடயங்களைப் பற்றி பேச வேண்டிய பொறுப்பு தமிழ் சமூகத்திற்கு உள்ளது. இவை பேசப்பட வேண்டும்" என்றும் அவர் தெரிவித்தார்.



குறுகிய காலமாக 3 ஆண்டுகள் தண்டனை பெற்ற சந்தோஸ் சசிகரன்

லண்டனில் 2000ம் ஆண்டிற்குப் பின் 20க்கும் மேற்பட்ட கொலைகள் இடம்பெற்றிருந்தது. பல்வேறு வன்முறைக் குழுக்களையும் சேர்ந்த 600 தமிழ் இளைஞர்களின் பட்டியலை மெற்றோபொலிட்டன் பொலிசார் பதிவு செய்திருந்தனர். வோல்தம்ஸ்ரோ, ஈஸ்ற்ஹாம், ரெட்பிறிஜ், குரொய்டன், ரூற்றிங், வெம்பிளி ஆகிய பகுதிகள் தமிழ் இளைஞர்களின் வன்முறை மிகுந்த பகுதிகளாக மெற்பொலிசாரால் அடையாளம் காணப்பட்டு இருந்தது. ஒபரேசன் என்வர் போன்ற நடவடிக்கைகளால் இவ்வன்முறைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்கு இருந்த போதும் முற்றாக அவற்றை இல்லாமல் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

# நீங்களும் ஒருக்கா திங் பண்ணுங்கோ..........

பேராசிரியர் பெக்கோ

### வயதுக்கு வந்த கிருஸ்ணன்:

பழைய புளொட் கிருஸ்ணத்மா இப்ப லண்டனில பரவலா உலாவா வெளிக்கிட்டுவிட்டார். கொழுத்த சீதனம் கொடுத்து கட்டின மனுசி மாதிரி ஜெயதேவன் அணையுடனேயே ஒட்டிக்கொண்டு திரியிறார். (எவ்வளவு நாளைக்கோ...)

விழாவுக்கு வந்தவையளை படம் எடுப்பம் என்றா கிருஸ்ணா அண்ணை அங்க பார்த்து, இங்க பார்த்து முகத்தை மறைச்சு பெரிய shy யாம். ...

அப்படியென்ன படத்திற்கு இவ்வளவு வெட்கம். கிருஸ்ணா அண்ணனின்ட இப்பத்தைய தலைவர் கருணா அம்மான் கூட படத்துக்கு இவ்வளவு shy இல்லை... இவருக்கு மட்டும் இஏன் இந்தக் கூச்சம் ?? சும்மா சொல்லக் கூடாது நல்ல வடிவான மனுசனும் தான்.

### அடுத்தமுறை ஒழுகாம பார்த்துக் கொள்ளுங்கோ....

எங்கட நியூகாம் உதவிமேயர் அண்ணை விடுமுறைக் காலங்களில் படுபிசி. உதவி மேயர் பதவியேற்பு, ஈஸ்றஹாம் முருகன் கோயில் தேர், மகாலட்சுமி கோயில் தேர், அது மட்டுமே செத்தவீடு, பிறந்தநாள், கலியாண வீடு என்று அண்ணனுக்கு இருக்க நிக்க நேரமில்லை. சாமத்திய வீடுகளில பேச வெளிக்கிட்டுட்டார் என்றும் அரசல் புரசலா கதை உலாவுது.

இவர் இரவு பகலா வீடு வாசலில இல்லாம ஓடித்திரிய, வீட்டில இருந்து தண்ணி leakக்காகி பக்கத்து வீட்டக்குள்ளை ஓடிட்டுதாம். அந்த அறுந்து போன பக்கத்திவீட்டு பழசு தண்ணி ஓடின இடங்களை படம் பிடிச்சுக் கொண்டு கவுன்சிலுக்கே போட்டுதாம். இவர் என்ன தன்ர வீட்டை கவனிக்கேல்ல எப்பிடி ஊரைக் கவனிக்கப் போறார் என்று பெரிய சவுண்டாம்.

இதைக் கேள்விப்பட்ட அண்ணை துண்டைக் காணம் துணியக் காணம் என்று வீட்டை ஓடிப்போய் பெடியலை எல்லாம் கூப்பிட்டு leak பிரச்சினையை சோட்டவுட் பண்ணீட்டாராம். துணை மேயற்ற leak பிரச்சினை மேயர் வரைக்கும் போய்ட்டுது என்று அண்ணைக்கு ஒரே feeling.

எதென்னவோ அடுத்தமுறை ஒழுகாமா பார்த்துக் கொள்ளுங்கோ...

### ஒட்டுக் குழுக்களுடன் ஒட்டாத மனுசர்கள்:

நம்மட ரேடியோ அண்ணன்ர வீட்டு விழாவில சகல ஐரோப்பிய ஒட்டுக் குழு உறுப்பினர்களும் பிரசன்னமா இருந்தினம். நானும் தான். வெளில விட்டுடாதெங்கோ.. ஐரோப்பிய ஒட்டுக் குழுக்களின் அணிசேர் மாநாடு போல இருந்தது என்று அதுக்குள்ளயே ஒருவர் comment அடிச்சார்.

இதில விசேசம் என்னென்றா ஒட்டாத குழுவின்ர பிரதிநிதிகள் கருணை அண்ணன், தியாகச் செம்மல் என்று சில பேரும் பிரசன்னமாகி இருந்திச்சினம். இவையை தம்பீன்ர ஆட்கள் கண்டா என்ன ஆகிறது. தேவையில்லாம ரிஸ்க் எடுக்கப்படாது கண்டியளோ.

### முடிவுக்கு வரும் சித்திரா....

தற்போது 100யைத் தாண்டிவிட்ட சித்திரா தொடர் 150வது ஒலிபரப்புடன் முடிவுக்கு வருகிறதாம். (அப்பாடா.!!!... ) பெருமூச்சு விட வேண்டாம். It is too rude. தொடர் சிரிஸ் ஒரு நல்ல விசயம் கண்டியளோ. தயாரிப்பாளரின்ர கஜானா காலியானவுடன யாரையாவது மண்டையப் போடப் பண்ணி அல்லது கதாநாயகியை யாருடனும் ஓடப் பண்ணி சீரியலை முடிவுக்கு கொண்டு வந்திடலாம்.

ஆனா நாய் வேசம் போட்டா குரைத்துத்தான் அக வேண்டும் என்பது போல, படம் எடுக்கிறது என்றால் என்ன கோதாரி நடந்தாலும் படத்தை இரண்டரை மணிநேரம் ஓட்டித்தான் ஆக வேண்டும் என்று அங்களாய்க்கிறார் நம்மட இயக்குனர் திலகம் பழையவன். பட்டவனுக்குத் தானே நோத் தெரியும் பாருங்கோ...

### சிங்களத்திற்கு பாடம் புகட்டுவோம்:

நம்மட காலைக்கதிர் தம்பி இப்ப ஒட்டுமொத்தமான இனவெறியில் இறங்கிவிட்டார். ஐரோப்பிய புலித் தம்பிமாரே கூச்சப்படும் அளவிற்கு இனவெறி...

அண்மையில் வெளியாகிய காலைக்கதிரில் "சிங்களத்திற்கு பாடம் புகட்டுவோம்" என்றொரு தலையங்கம். எனக்கே சரியா புல்லரிச்சுப் போச்சு தலையங்கத்தை பார்த்தில்ல, காலைக் கதிர் தம்பின்ர மனுசி சிங்களம்... அதை நினைச்சுத் தான்!!! ஒருவேளை காலைக் கதிர் தம்பி தன்ர மாமனைத் தான் திட்டுறாரோ??

### ஜொனிவேக்கர் டாக்டர் தடுமாற்றம்:

பல ஆண்டுகளாக பல பத்திரிகைகளில் ஏறி கலைபட்ட பிரபல பத்திரிகையாளர் தூசன பூசனம், ஏழுபடை நாடான் டாக்டர் இந்திரகுமார் காலைக்கதிரில் இருந்தும் கலைக்கப்பட்டு விட்டாராம். இதில ஒன்றும் பெரிதாக ஆச்சரியப்படுவதற்கில்லை. இவர் இனி எங்க தண்டலுக்குப் போகப் போகிறார் என்று பார்ப்பம். மனுசன் சும்மா இருக்காது கண்டியளோ...

### Devil Charity... the Hindu God:

Charity Commission சீவரத்தினம் ஐயாவிற்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளை தொகுத்து Devil... என்று ஆங்கிலப் புத்தகம் ஒன்றைப் பிரசுரிக்க நம்மடை சிவயோகம் ஐயா ரெடியாகிறார். இப்புத்தகத்தில் குறிப்பாக ஐயா Charity Commissionக்கு எழுதிய கடிதம், Charity Commissionன் பதில்களும் இடம்பெறுமாம்.

நல்லவனுக்குத் தான் அதிகம் சோதனை வரும் என்று பெரியவை தெரியாமலே சொன்னவை. நம்மட சீவரத்தினம் ஐயா எவ்வளவு தங்கமான உத்தமமான மனுசன். இந்த நாசமா போன பிரித்தானிய அரசும் அதன் கூலிப்படையான மெற்றோபொலிட்டன் பொலிசும் ஒட்டுக் குழுவான Charity Commissionனும் ஐயாவுக்கு எவ்வளவு கரைச்சல் குடுக்கினம். பாவம் மனுசன். எல்லோரும் நாசமா போக!!!

### கிசுகிசு லிங்:

பரிஸில கருப்புச் சட்டைக்காரர் பெரியாற்ற பேரில "சோ"க் காட்டுற நம்மட தம்பி தேசம்நெற்றுக்கு கிசுகிசு லிங் குடுத்திருக்கிறாராம் என்று லண்டனில உள்ள ஜனநாயகத் தலைவிக்கு ஒரே புல்லரிப்பாம்.

"சோ" தம்பி வெல் டன். கீப்பிற் அப். சின்ன அட்வைஸ் உந்த கிசு கிசு வோட உங்கட சொந்தக் கதையளையும் வெப்பில ஏத்தி லிங்குடுத்தா ஹிட்ஸ் எகுறுமல்லோ. Think about it. Any help ??

## தேர் திருவிழா : 07 செப்ரம்பர் 2008

